IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தண்ணீர் தேசம் நாவலில் காதல்

# Love In The Novel ‘Thanneer Desam’

**முனைவர் இரா. உஷாராணி,**

**உதவிப்பேராசிரியர்,**

**தமிழ்த்துறை,**

**சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**சேலம் - 636 005,**

**தமிழ்நாடு,**

**இந்தியா.**

**ORCID:** https://orcid.org/0000-0002-8964-0535?lang=en

**Dr.R.Usha Rani,**

**Assistant Professor,**

**Department of Tamil,**

**Sona College of Arts and science,**

**Salem -636 005.**

**Abstract**

This study examines the various dimensions of love portrayed in the novel Thanneer Desam. Love is presented as a fundamental aspect of human life, encompassing emotions such as affection, care, and compassion. Through the relationship between Kalaivannan and Tamilroja, the study highlights the importance of love languages, emotional sharing, and mutual trust in a romantic relationship. It emphasizes that true love lies in supporting each other in both joy and hardship. The narrative illustrates how lovers share their suffering in situations of hunger, thirst, and danger, thereby revealing the depth of their bond. Furthermore, the idea of remaining united even in death reflects the highest form of love. The study also underscores that love serves as a force for equality, women’s empowerment, and social progress. Here are suitable Keywords for your research article based on the novel Thanneer Desam.

**Keywords**

Love, Emotional Bonding, Love Languages, Mutual Trust, Sacrifice, Suffering and Support, Romantic Relationship, Gender Equality, Women's Empowerment, Social Change

## ஆய்வுச்சுருக்கம்

தண்ணீர் தேசம் நாவலில் இடம்பெறும் காதலின் பல்வேறு பரிமாணங்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. காதல் மனித வாழ்வின் அடிப்படையான அன்புறவாக விளங்கி, அன்பு, பாசம், கருணை போன்ற உணர்வுகளின் ஒருங்கிணைப்பாக அமைகிறது. கலைவண்ணன் மற்றும் தமிழ்ரோஜா ஆகியோரின் உறவை எடுத்துக்காட்டாகக் கொண்டு, காதலில் அன்பு மொழிகள், உணர்ச்சி பகிர்வு மற்றும் பரஸ்பர நம்பிக்கை முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைக் கட்டுரை விளக்குகிறது. இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பதே உண்மையான காதல் என்பதை நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, பட்டினி, தாகம், ஆபத்து போன்ற சூழல்களில் துயரைப் பகிர்ந்து கொள்வது காதலின் ஆழத்தை உணர்த்துகிறது. மேலும், மரணத்திலும் பிரியாத உறவு காதலின் உச்சநிலையை காட்டுகிறது. இதனுடன், காதல் சமத்துவம், பெண்ணிய உரிமை மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான சக்தியாக அமைகிறது என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

## திறவுச் சொற்கள்

காதல், அன்பு, பாசம், உணர்ச்சி பகிர்வு, நம்பிக்கை, தியாகம், இன்பம்–துன்பம், காதல் மொழிகள், சமத்துவம், பெண்ணிய உரிமை, சமூக முன்னேற்றம், மனிதநேயம்.

## முன்னுரை

காதல் மனித வாழ்வின் அடிப்படை உணர்வாக இருந்து மனிதனை மனிதனாக்கும் சக்தியாக விளங்குகிறது. அன்பு, பாசம், கருணை, நேசம் போன்ற உயர்ந்த பண்புகள் காதலின் மூலம் வெளிப்படுகின்றன. நாவலில் காதல் வெறும் உணர்ச்சி அல்லாது வாழ்வியல் அனுபவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கலைவண்ணன் மற்றும் தமிழ்ரோஜா ஆகியோரின் உறவு காதலின் உண்மைப் பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது. இன்பத்திலும் துன்பத்திலும் துணையாக இருப்பதே உண்மையான காதல் என்பதை நாவல் எடுத்துரைக்கிறது. காதல் மனிதனின் மனப்பக்குவத்தையும் பொறுப்புணர்வையும் வளர்க்கிறது. மேலும், காதல் சமத்துவம் மற்றும் பெண்ணிய உரிமைகளை வலியுறுத்தும் சமூக சக்தியாகவும் அமைகிறது. இத்தகைய காதலின் பல்வேறு பரிமாணங்கள் இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. அதனால், காதலின் வாழ்க்கைமதிப்பை உணர்த்தும் நோக்கில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

**காதல்**

ஒத்த அன்பும் எண்ணமும் கொண்ட ஆண் பெண் அன்பு கொள்வதும் காதலாகும். காதலே இன்று மனிதன் மனிதனாக வாழக் காரணமான அன்புறவுகளில் ஒன்றாக விளங்குகின்றது. காதல் இல்லாத இடமில்லை என்றே கூறவாம் அனைத்துயிர்களிடமும் காதல் நிரம்பியுள்ளது. காதல் தீயவனை மாற்றும். ஆதலால் தான் பாரதிதாசன் காதலியின் கடைக்கண் பார்வை பட்டால் காளையர்க்கு மாமலை என்று சொன்னான். காதலே சமுதாயத்தின் சிறப்பிற்கும், சாதியின் அழிவிற்கும் அடிப்படையாக அமைகிறது. காதலர்கள் அழிந்தாலும் காதல் என்றும் அழிவதில்லை.

"உயர்திணை உயிர்களான மக்களும் தேவர்களும் அஃறிணை உயிர்களான விலங்குகள் பறவைகள் அனைத்தும் காதல் கொள்ளுவது இயல்பு. காதல் செய்யாத மனிதன் மனிதனே இல்லை. காதல் என்ற சொல்லுக்கு அன்பு, பாசம், கருணை, நேசம், இரக்கம் எனப் பல்வேறு பொருள் கொள்ளலாம். காதல் மிகச்சிறிய சொல் எளினும் மிகப் பெரிய சக்தி, தொட்டுணர முடியாத இந்த அதிஅற்புத உணர்வுதான் மனித நாகரிகத்தின் உயிர்ச் சுவராக இன்றளவும் இருந்து கொண்டிருக்கிறது. கண் வழி புகுந்து கருத்தினில் கலந்து, நெஞ்சிலே நிறைவதே காதல்" (மத. இராணிபிரகாஷ் முதலிய அறுவர் (ப. ஆ)அற இலக்கியம் பன்முகப் பார்வை, தொகுதி-2, ப. 665) என்ற கருந்து காதலின் தன்மையைவு செய்துள்ளது இத்தண்ணீர்தேசம் நாவலின் முதன்மை கதாப்பாத்திரங்களான கலைவண்ணன், தமிழ்ரோஜாவின் காதலின் தன்மையைக் இக்கட்டுரை ஆராயவுள்ளது.

**காதல் மொழிகள்**

காதலில் அன்பு பாட்டல் வேண்டும். துன்பமானநிலையிலும் மனிதனின் மனதுக்கு ஆறுதல் அளிப்பது காதல் மொழிகள் தான். நம்பிக்கையின் வித்தாக அமைவது இம்மொழிகள். சங்ககாலத்தில் நலம் பாட்டல் என்ற அப்படையில் காகும் மோழிகள் அமைந்தன. காதலிப்பவர்கள் ஒருவரையொருவர் கொஞ்சி பேசும் காதல் மொழிகளை அன்பு மொழிகளை பேசாமல் இரார். நாவலிலும் கலைவண்ணன் தமிழ்ரோஜாவிடம் மெய்ந்தொட்டு பயிரலாகிய காகுல் மொழிகளைக் காணமுடிகிறது.

"காதலியும் கடலும் சலிப்பதில்லை

தமிழ்ரோஜா

அவள் மல்லிகைக்கரம் தொட்டு

மணிக்கட்டில் முத்தமிட்டான்

நேசமின்சாரம் நெஞ்சுக்குள் பரவியது

அவளை இழுத்து வளைத்து

இறுக்கி இறுக்கி உருக்கி உருக்கி

மடியில் ஊற்றிக் கொண்டான். (வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 10)

என்ற கருத்தும்

"ஆகா என்று ஆச்சரியம் காட்டிய தமிழ்
அவன் முகத்தில்
முள்குத்தாத பிரதேசம் தேடி
முத்த மிட்டாள்
அந்த முத்தச் சூடு உயிரெல்லாம்
பரவக் கண்டவன் அவள் கழுத்தடியில் கைபதித்துக்
குளிரக்குளிரக் குறுமுடி கோதினான்
குழந்தையே என் குழந்தையே
என்று கொஞ்சினான். ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 14)

என்ற கருத்தும் அதனைக் குறிப்பிட்டுள்ளது. காதலில் அன்பு பரிமாற்றமும், அன்பு மொழிகளும் வலுச் சேர்ப்பவை என்பதை அறியலாம்.

**இன்ப - துன்பத்தில் துணை**

காதல் என்பது இன்பம் மட்டும் கண்டு சுகம் காண்பது அன்று. உண்மையாக காதல் என்பது ஒருவர் ஒருவரின் துன்பங்களைப் பகிர்ந்து அத்துன்பங்களைக் களைந்து வாழ்வதாகும். இன்பத்தை மட்டுமேயன்றி துன்பத்தையும் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும். அது மட்டுமேயல்லாமல் ஒளிவு மறைவின்றி வெளிப்படத் தன்மை காதலில் இருப்பது மிகவும் இன்றியமையாதது.

தமிழ்ரோஜாவுக்கு நீர் என்றால் பயம். கலைவண்ணன் அவளின் பயம் தணிக்க மீனவர்களுடன் விசைப்படகில் கடலுக்கு அழைத்துச் செல்கின்றான். முதலில் பயந்தவள் செல்ல செல்ல பயம் குறைக்கிறாள். கலத்தில் அசைவ உணவு செய்யப்படுகிறது. தமிழ் சைவம் மட்டுமே உண்ணக்கூடியவள். அவள் பட்டினி கிடக்கிறாள் கலைவண்ணன் காதலியின் பட்டினியைப் பங்கிட்டுக் கொண்டு தானும் பட்டினி கிடக்கிறான். காதலியின் துன்பத்தைக் காதலன் பகிர்ந்து கொண்ட காதலியின் சிறப்பை,

வாந்தி கண்ட தமிழ்ரோஜா பகல் முழுவதும்
தேநீர் தவிர எதையும் அருந்தவில்லை
அவளோடு அவள் பட்டினியைப்
பங்கிட்டுக் கொண்டவனும் அதுவரை எதுவும்
அருந்தவில்லை ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 80)

என்ற கருத்தானது வெளிப்படுத்தியுள்ளது. மேலும், கப்பல் பழுதாகி நடுக்கடலில் நின்றமையாலும் பல நாள் உதவி கிடைக்காமையால் அங்கேயே நங்கூரமிட்டு தத்தளித்தனர். இதனால் உணவு மற்றும் குடிநீர்

தட்டுப்பாடு ஏற்பட்டது. உணவுப் பொருட்கள் அனைத்தும் முடிந்து விட்ட நிலையில் கொண்டு வந்த நீரைப் பருகி வாழ்ந்து வருகின்றனர். அப்போது கலைவண்ணன் தனக்குக் கிடைத்த பங்கை தான் அருந்தாமல் தன் காதலிக்குக் கொடுத்த சிறப்பை,

"அவன் கையில் - அரை டம்ளர் தண்ணீர்

நேற்று பருகாமல் வைத்திருந்த அவன் பங்கு

அவள் உணர்ச்சிவசமானாள். பரவசப்பட்டுப்

பாய்ந்தெழுந்து அவன் தோள் கட்டினாள் ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 147)

என்ற பதிவில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இதன் வழி துன்பத்தில் துணைநின்று தான் பசித்திருந்தாலும் காதலியின் பசியைப் போக்க எண்ணிய காதலனின் அன்பை அறிய முடிகிறது.

தண்ணீரும் கலத்தில் முற்றிலும் தீர்ந்துவிடுகிறது.இதனால் கலைவண்ணன் மிகவும் வருந்துகிறான். காரணம் தன் காதலி எவ்வாறு பசித்திருப்பாளோ? என்றும் அவள் உயிரைக் காப்பது எவ்வாறு என்றும் எண்ணமிட்டு துன்பம் கொள்கிறான். தன் உயிர் போனாலும் பரவாயில்லைத் தன் காதலி உயிர்வாழ நீர் வேண்டும் என்று எண்ணி என்ன செய்வது என்று புரியாமல் மழை மேகத்திடம் முறையிடுகிறான். இதனை,

"இந்த நிமிஷத்தின் முதல் தேவை தண்ணீர்தான்

சுருங்கிக் கொண்டிருக்கும் உயிரைச்

சில மில்லி மீட்டர்களாவது விரியவைப்பது

தண்ணீர் மட்டும்தான் தமிழ் ரோஜா தாங்குவாளோ ?" ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 149)

என்ற கருத்தும்,

"மழைத்துளிகளை உண்டுவாழுமாமே

சாதகப் பட்சிகள்

நாங்களும் இப்போது சாதகப்பட்சிகளே

இந்தச் சாதகப் பட்சிகளின் மாதகம்

இப்போது உன்கையில் மழையே ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 150)

என்ற கருத்தும் பதிவுசெய்துள்ளன. இதன்வழி, காதலியின் துன்பத்தைத் துடைக்க முடியாமல் காதலியின் எண்ணத்தின் பசியை அறியமுடிகிறது.

**மரணத்திலும் உடனிருப்பது காதல்**

வாழ்க்கையில் மட்டும் காதலர்கள் சேர்ந்து வாழ நினைப்பது மட்டும் காதல் அல்ல. மரணத்திலும் ஒன்று சேர்ந்து மரணிப்பதுதான் காதல். காதலர்களில் ஒருவர் இறந்த பின் மற்றொருவர் உயிருடன் வாழ்வது உயிர் இருந்து பிணத்திற்குச் சமமாகவே கருதப்படுவர். ஒருவரை மரணம் அணுகும் போது, ஒன்று மரணத்திலிருந்து அவரைக் காக்க வேண்டும். இல்லையெனில் இருவரும் மரணத்திற்கு இரையாக வேண்டும். காதலர்கள் வாழ்விலும் சாவிலும் பிரியாமல் இருக்க வேண்டும். நாவலிலும் இத்தகைய அழியாக் காதலை ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

கலைவண்ணனும் தமிழ்ரோஜாவும் காதலர்கள். தமிழ்ரோஜா நீர்நிலைகளைக் கண்டு பயப்படக் கூடியவள். அவள் பயத்தைப் போக்க வேண்டும் என்று எண்ணிய கலைவண்ணன் படகில் கடலில் வற்புறுத்தி அழைத்துச் செல்கிறான். ஆழ்கடல் பகுதிக்குச் சென்றும் அவள் பயம் நீங்கவில்லை கரைசேரவே விரும்புகிறாள். அவள் பயத்தைப் போக்க எண்ணிய கலைவண்ணன் தன் உயிரைப் பற்றியும் கவலைப்படாது கடலில் குதிக்கிறான். கடலில் தத்தளிக்கிறான். இதனைக் கண்ட தமிழ்ரோஜா காதலனைக் காப்பாற்ற நீச்சல் தனக்குத் தெரியாது என்பதை மறந்து, அவளும் தண்ணீரில் குதித்துவிடுகிறாள். காதலன் உயிருக்கு ஆபத்து ஒன்று நிகழும் போது காதலியும் அவ்வாபத்தை ஏற்றுக் கொள்ளும் காதலியின் உன்னத நிலையை,

"என்னைக் காப்பாற்றும் அவசரத்தில் நீ

தன்னை மறந்து தாவிக் குதித்தாயே ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 128)

என்ற கருத்தானது பதிவு செய்துள்ளது. இதன்வழி காதலனுக்காகக் காதலியும். காதலிக்காகக் காதலனும் உயிர்விடத் துணிந்த காதல் மகத்துவத்தை அறியமுடிகிறது.

கப்பலில் நடுக்கடல் பகுதிக்குச் சென்ற தமிழ்ரோஜாவும் கலைவண்ணனும் கப்பலில் பழுது காரணமாக மாட்டிக் கொள்கின்றனர். அங்கு உணவின்றியும், நீரின்றியும் மிகவும் துன்பப்படுகின்றனர். கடலுக்குத் தமிழ்ரோஜா புதியதாகையாலும் உணவும் தண்ணீரும் இன்றி பசியால் வருந்தினமையாலும் அவள் நோய்க்கு ஆட்படுகிறாள். உடல் மெலிந்து விடுகிறாள். உடல் சூட்டிலும் குளிரிலும் துன்பப்படுகிறது. கலைவண்ணன் பலவகையில் சூட்டையும் குளிரையும் தணிக்கப் போராடுகிறான். இருந்த போதிலும் அவள் செயலற்று வீழ்ந்து கிடக்கிறாள். தான் இறந்து படுவேன் என்று கூறுகிறாள். கலைவண்ணன் நான் இறந்தால் தான் மரணம் உன்னைத் தழுவும் என்று கூறுகிறான். காதலி இல்லாத வாழ்க்கையையும், அவள் இறப்பதற்கு முன் தான் இறந்து விட வேண்டும் என்றும் எண்ணும் காதலின் உயரிய உணர்வை,

"அடியே என் ஆருயிரே என்ன சொன்னாய்

நீ இறந்துவிடுவாயோ? உன்னை

இறக்கவிடுவேனோ? என் உயிரை

உறை போட்டல்லவா உன்உயிரை

வைத்திருக்கிறேன் மரணம் என்உயிர்

கிழிக்காமல் உன் உயிர் தொடுவது எப்படி

.......................... என் உயிரின் பெண்வடிவம் நீ

உன் உயிரின் ஆண்வடிவம் நான்

இதில் யாருக்குத் தனியாகச் சாவு வரும்

நீ மரணித்தால் என் மரணம் நான் மரணித்தால் உன்

மரணம் ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 229)

என்ற கருத்தின் வழி அறியமுடிகிறது. இதன்வழி மரணத்திலும் பிரிய எண்ணாத காதலர்களின் உயரிய அன்பையும், காதலையும், உணர்வையும் உணரமுடிகிறது.

மேலும்,

"நம் காதல் மீது ஆணை உன்னை உயிரோடு

கரை சேர்ப்பேன். இல்லையென்றால் நம்

இரண்டு உடல்களும் கரை சேரும்"( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 234)

என்ற கருத்தானது வாழ்விலும், சாவிலும் பிரியவிரும்பாத உயிர்க்காதலின் சிறப்பைப் பதிவுசெய்துள்ளது.

**காதலின் தன்மை**

காதல் என்பது வெறும் உடல் சுகத்திற்காக என்று கருதாமல், உள்ளத்தைப் புரிந்தும், அந்த உள்ளத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதாகவும் அமையவேண்டும். அதுவே சிறந்த காதலாகும். காதலர்களில் பெண்களுக்கு ஆண்கள் சமஉரிமை தருவதே காதலின் சிறப்பாகும். பெண்ணிய உரிமையும், சமுதாயத்தில் அவர்களுக்கான இடத்தையும் காதல் தரும் என்ற நம்பிக்கையை ஆண்கள் ஏற்படுத்த வேண்டும். காதலில் இருவரும் சமஉரிமை உடையவர்களாகவும், உணர்வுகளுக்கு மதிப்பு அளிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

நாவலில் வரும் கலைவண்ணன் தமிழ்ரோஜா என்ற பெண்ணைக் காதலிக்கிறான். அவள் வீட்டினுள்ளே வாழ்ந்தவள். பணக்காரப் பெண். இருந்தாலும் ஆணுக்கு அடங்கியது தான் பெண்வாழ்க்கை என்ற பழைய மரபைத் திணித்து வளர்க்கப்பட்டவள். கலைவண்ணன் அதை உடைத்து சமுதாயத்தில் பெண்ணிய உரிமை, அவளுக்கு இருக்கும் இடம், மதிப்பு போன்றவற்றை உணர்த்தி சமுதாயத்தின் போக்கைத் தெளிவுறுத்தி திருமணம் செய்து வாழ வேண்டும் என்று எண்ணுகிறான். சமுதாயத்தில் ஆணைப் போல பெண்ணும் அனைத்துவிதமான உரிமைகளும் பெற்று வாழ வேண்டும் என்று எண்ணும் சிறப்பை,

"ஆணுக்குத் தான் அதிக உரிமை

பெண்ணுக்கு இல்லை என்ற

பிற்போக்குத் தனத்திலிருந்து

பிதுங்கி வெளியே வா ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 34)

என்ற பதிவானது வெளிப்படுத்தியுள்ளது. இதன்வழி சமுதாயத்தில் தன்னைப் போன்றே தன் காதலியும் அனைத்து உரிமைகளையும் பெற்றும், சமுதாயத்தின் நிலை அறிந்து வாழ வேண்டும் என்றும் எண்ணும் காதலனின் புரட்சி சிந்தனையை அறிய முடிகிறது. மேலும்,

"அறியாப்பெண்ணே அழுகையும் அச்சமும்

தீர்ந்தநிலைதான் சுதந்திரம்

இதோபார் பூமி உருண்டை இன்னொரு

நூற்றாண்டுக்குள் சுற்றப்போகிறது

பெண்மாறிக் கொண்டிருக்கிறாள்

தலையணை உறைமாற்றி மட்டுமே

தயாரிக்கப்பட்ட பெண்

துப்பாக்கிகளுக்குத் தோட்டா மாற்றத்

தயாராகி விட்டாள் ( வைரமுத்து. தண்ணீர் தேசம், ப. 77)

என்ற கருத்து, பெண் ஆணுக்கு அடிமையில்லை என்றும், பூமியில் புதுமையைப் பெண் படைக்க வேண்டும் என்றும், அடிமை தளையிலிருந்து விடுபட்டு, பெண் கொடுமைகளைத் தகர்த்தெறிந்து தனக்கென ஓர் இடத்தைச் சமுதாயத்தில் பெண் பெற்று வாழ வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

முடிவுரை

தண்ணீர் தேசம் நாவலில் காதல் ஒரு சாதாரண உணர்வாக அல்லாது, மனித வாழ்வின் ஆழமான உயிர்த்துடிப்பாக வெளிப்படுகிறது. கலைவண்ணன் மற்றும் தமிழ்ரோஜா ஆகியோரின் உறவு வழியாக, காதல் அன்பு, தியாகம், பரிவு, நம்பிக்கை ஆகிய உயரிய பண்புகளின் ஒருங்கிணைப்பாக இருப்பது தெளிவாகிறது. இன்பத்திலும் துன்பத்திலும் துணைநிற்கும் உறுதியான மனப்பாங்கும், ஒருவருக்கொருவர் உயிரையே அர்ப்பணிக்கத் தயங்காத நிலையும் காதலின் உன்னதத்தை எடுத்துக்காட்டுகின்றன. மேலும், காதல் மரணத்தையும் மீறும் நிலையான சக்தியாகவும், சமூக மாற்றத்திற்கான இயக்கமாகவும் சித்தரிக்கப்படுகிறது. குறிப்பாக, பெண்ணிய உரிமை, சமத்துவம் போன்ற கருத்துகளை முன்னிறுத்துவதன் மூலம், காதல் சமூக முன்னேற்றத்தின் அடிப்படையாக விளங்குகிறது என்பதை நாவல் உணர்த்துகிறது. எனவே, காதல் மனித வாழ்க்கையை முழுமைப்படுத்தும் உயரிய சக்தி என்பதையும், அது மனிதநேயத்தை வளர்க்கும் அடித்தளமாக

அமைகிறது என்பதையும் இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**துணைநூற்பட்டியல்**

1ᵘ இராணி பிரகாஷ்ᵘ பᵘந ;பᵘஆ௲ அற இலக்கியம் பன்முகப்பார்வை தொகுதி.12 அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரிஏ சென்னை.60015 ᵘ

2ᵘ வைரமுத்துஏ தண்ணீர்தேசம்ஏ சூர்யாலிட்ரேச்சர் ;பி௲ லிட்ஏ சென்னைᵘ

**Reference**

1.Rani Prakash P.N.,( Pathippasiriyar) Ara Ilakiyam Panmugap paarvai., Volume – 12, Annai Velankanni Womens College, Chennai – 15

2.Vairamuthu, Thannerthesam, Suryaliterature (P) lit., Chennai